பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

08 11 2024 **FRIDAY** 7 15 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. இந்தியாவின் உற்பத்தி பொருட்களை உலக நாடுகளில் சந்தைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.
3. தேசிய கற்றல் வாரத்தில் மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் ஆர்வமுடன் பங்கேற்றதாக மத்திய பணியாளர் நலத்துறை தெரிவித்துள்ளது.
4. இளையோர் பரிமாற்றத் திட்டத்தின் கீழ், காஷ்மீரைச் சேர்ந்த இளையோர் குழுவினர் நாளை முதல் வரும் 15ஆம் தேதிவரை சென்னையில் கலை மற்றும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளனர்.
5. இந்தியா – தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான முதலாவது டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டி டர்பனில் இன்று நடைபெறுகிறது.

**>>>><<<**

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் நோக்கில் எத்தனால் கலந்த எரிபொருள் பயன்பாடு, வெங்காய நேரடி கொள்முதல் போன்ற திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மஹாராஷ்ட்டிர மாநிலம், நாசிக்கில் அம்மாநில சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரத்தில் உரையாற்றிய அவர், அங்கு மத்திய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களையும் பட்டியலிட்டார்.

அம்மாநிலத்தின் வளர்ச்சிக்காக மத்திய – மாநில அரசுகள் இணைந்து செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

அடல் சேது, மும்பை மெட்ரோ, வர்தவான் துறைமுகம் போன்ற உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

**>>>><<<**

ஊழலை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்ற மத்திய அரசின் உறுதிப்பாட்டில் தமக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற ஊழல் எதிர்ப்பு விழிப்புணர்வு வார நிகழ்ச்சியில் பேசிய அவர், ஊழலை வேரோடு அகற்ற வேண்டும் என்ற உறுதிப்பாட்டோடு பல நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளதாக குறிப்பிட்டார்.

அரசு நலத்திட்ட பயனாளிகளுக்கான தொகையை நேரடியாக வங்கிக் கணக்கில் செலுத்துவது, மின்னணு சந்தை, பொருளாதார குற்றங்கள் தடுப்புச் சட்டம் போன்ற நடவடிக்கைகள் மூலம் ஊழல் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

ஊழலில் ஈடுபடுவோர் மீது சட்டரீதியாக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுப்பதில் தாமதம் ஏற்படுவதை அனுமதிக்கக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

காலதாமதமாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் ஊழல் குற்றவாளிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அமைந்து விடும் என்றும் குடியரசுத்தலைவர் எச்சரிக்கை விடுத்தார்.

ஊழலுக்கு எதிரான எந்த நடவடிக்கையும், சமூகநீதி மற்றும் சமத்துவத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

நாட்டின் வளர்ச்சிக்கு ஊழல் பெரும் தடையாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒவ்வோராண்டும் அக்டோபர் 31ஆம் தேதி சர்தார் வல்லபாய் பட்டேலின் பிறந்த நாளன்று, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டு உறுதிமொழி எடுக்கப்படுவதாக தெரிவித்த அவர், இந்த உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு நாட்டு மக்கள் அனைவருக்கும் உள்ளதாக தெரிவித்தார்.

அரசின் செயல்பாடுகள் மற்றும் நலத்திட்டங்கள் மீது மக்களுக்கு உள்ள நம்பிக்கை, சிறந்த நிர்வாகத்தை உறுதி செய்யும் என்றும் திருமதி. திரௌபதி முர்மு கூறினார்.

**>>>><<<**

2047ஆம் ஆண்டில் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான அரசு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தகவல் ஒலிப்பரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

தேனி மாவட்டம், காமாட்சிபுரம் வேளாண் அறிவியில் மையத்தில் மகளிர் - விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோருக்கான தொழில்நுட்பக் கருத்தரங்கில் உரையாற்றிய அவர், வேளாண் வளர்ச்சிக்காகவும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், கடந்த பத்தாண்டுகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

அரசின் மானியங்கள் நேரடியாக பயனாளிகளுக்கு கிடைக்கும் வகையில் பிரதமரின் ஜன்தன் யோஜனா திட்டத்தின் கீழ், வைப்புத்தொகை ஏதுமின்றி வங்கிக் கணக்குகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தொழில் முனைவோருக்கு முத்ரா கடன் திட்டத்தின் கீழ், கடனுதவி வழங்கப்பட்டு வருவதாகவும், புதிய வேலைவாய்ப்பை உருவாக்கித் தரும் திட்டத்தின் கீழ், 35 சதவீத மானிய உதவி வழங்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

சிறு குறு தொழில் அமைப்புகள் மற்றும் கைவினைஞர்களின் உற்பத்திப் பொருட்களை, காதி நிறுவனம் மூலம் கொள்முதல் செய்து விற்பனை செய்வதற்கான சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை உலகின் பல நாடுகளில் சந்தைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பால் பொருட்கள் உற்பத்தியில் தன்னிறைவு பெறும் முதன்மை நாடாக இந்தியா திகழ்வதாக திரு. எல். முருகன் தெரிவித்தார்.

அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின் கீழ், கடந்த பத்தாண்டுகளில் நாடுமுழுவதும் 10 கோடிக்கும் அதிகமான வீடுகள் ஏழை எளிய மக்களுக்கு கட்டித்தரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் அனைத்து தரப்பு மக்களும் பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டும் என்ற அடிப்படையில் விவசாயம், கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பெண்களுக்கான அதிகாரத்தை உறுதி செய்வதில் மத்திய அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருவதாக கூறிய அமைச்சர், பெண் தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருவதாக குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில், மத்திய அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ், கடனுதவி பெற்ற பெண் தொழில் முனைவோருக்கு பாராட்டுச் சான்றிதழ்களையும், வேளாண் தொழில்நுட்பம் தொடர்பான கையேடுகளையும் மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் வழங்கினார்.

**>>>><<<**

ஜார்க்கண்ட் மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் சாரிவாரி கணக்கெடுப்பை நடத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும் அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. ராகுல்காந்தி கூறியுள்ளார்.

ஹிந்தேகா-வில் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணியின் சார்பில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், 50 சதவீத இடஒதுக்கீட்டு வரம்பை நீக்குவதற்கு முயற்சி எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

பழங்குடியினர் நலனில் பிஜேபி அக்கறை செலுத்தவில்லை என்றும் திரு. ராகுல்காந்தி கூறினார்.

>>>><<<

தேசிய கற்றல் வாரத்தில் மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் ஆர்வமுடன் பங்கேற்றதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது

இதுதொடர்பாக மத்திய அரசு பணியாளர் அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மத்திய அரசு பணியாளர்களுக்கான தேசிய கற்றல் வாரத்தில் 4 லட்சத்து 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் நான்கு மணி நேரத்திற்கும் கூடுதலாக கற்றல் பணியை முடித்திருப்பதாக கூறப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 19ஆம் தேதி முதல் 27ஆம் தேதிவரை நடைபெற்ற கற்றல் வாரத்தில் குரூப்-ஏ பிரிவைச் சேர்ந்த 37 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உயரதிகாரிகள் கர்மயோகி **Saptah** என்ற தேசிய கற்றல் வாரத்தில் பங்கேற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<

இளையோர் பரிமாற்றத் திட்டத்தின் கீழ், காஷ்மீரைச் சேர்ந்த 132 இளைஞர்கள் சென்னை வந்துள்ளனர்.

நாளை முதல் இம்மாதம் 15ஆம் தேதிவரை சென்னை அடையாறில் உள்ள இளையோர் விடுதியில் தங்கியிருந்து கலை மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளனர்.

காஷ்மீரின் அனந்தநாக், குப்வாரா, பாரமுல்லா, படுகாம், ஸ்ரீநகர், புல்வாமா ஆகிய ஆறு மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்கள் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

எல்லை தாண்டிய தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட இந்த இளைஞர்கள், நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள இளைஞர்களுடன் தங்களது கருத்துக்களை பகிர்ந்து கொண்டு, சீரிய முறையில் செயல்படுவதற்கான வாய்ப்பை அவர்களுக்கு அளிக்கும் நோக்கில் மத்திய உள்துறை மற்றும் இளையோர் விவகாரங்கள் துறை இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது.

>>>><<<

சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சிக்காக மாநில அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. தா.மோ அன்பரசன் தெரிவித்துள்ளார்.

கோவை கொடிசியா வர்த்தக அரங்கில் சர்வதேச வாங்குவோர் விற்பனை சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர், தொழில் நிறுவனங்களுக்கு இடையே மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களை வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், கோவை உலக தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டில் 115 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் பெறப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - அன்பரசன் 51 செகண்ட்ஸ்)

>>>><<<

இந்தியா – தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான முதலாவது டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டி டர்பனில் இன்று நடைபெறுகிறது.
இப்போட்டி இரவு மணி 8-30-க்கு தொடங்குகிறது.

>>>><<<

அஸ்ஸாம் அணிக்கு எதிரான ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாளான இன்று தமிழக அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதியில் விக்கெட் இழப்பின்றி 8 ரன் எடுத்துள்ளது.

குவாஹாத்தியில் நடைபெற்று வரும் இப்போட்டியில் தமிழக அணி முதல் இன்னிங்ஸில் 338 ரன்னும், அஸ்ஸாம் அணி 445 ரன்னும் எடுத்தது.

>>>><<<

ஆஸ்திரேலியா-ஏ அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான இன்று ஆட்டநேர இறுதியில் இந்தியா-ஏ அணி 5 விக்கெட் இழப்புக்கு 73 ரன் எடுத்துள்ளது.

முன்னதாக, ஆஸ்திரேலியா-ஏ அணி முதல் இன்னிங்ஸில் 223 ரன்னுக்கும், இந்தியா-ஏ அணி 161 ரன்னுக்கும் ஆட்டமிழந்தது.

>>>><<<

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் Anahat Singh அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

காலிறுதியில் அவர் ஜப்பானின் Akari Midorikawa—வை 9-11, 11-14, 11-7, 11-7 என்ற செட்கணக்கில் தோற்கடித்தார்.

>>>>END<<<